போர்வாள்

ிரியர்கள் : காஞ்சி, மணிமொழியார் — தனி இதழ் அணா 1½
, இளஞ்செழியன், B. A. (Hons.) — வெளிநாடு அணா 2

சென்னை 22—11—47 சனிக்கிழமை — வீச்சு 15

குரலினை உயர்த்திக் கூவடா

நாரா. நாச்சியப்பன்

ுரலினை உயர்த்தி நீ கூவடா!—இந்தக்
தலையங் கிழிந்திடக் கூவடா!
ரிமையாம் போரினைத் துவக்கினேம்—இனி
ல(கு) அதம் ஆம் என்று முழக்கியே குரலினை.

ாரினை ஆண்டசீர்த் திராவிடன்—இன்று
ரம்பரை அடிமையென் றுவதோ?
தரினை ஓட்டிய திராவிடன்—இன்று
தருப்பிச்சை ஏற்றுத் திரிவதோ? குரலினை.

ரங்கின வடவரின் ஆட்சியில்—நாம்
காடுமைப் படுதலை யெண்ணினல்
ிரங்குவர் உலகிடை மக்களே—இதை
திர்க்கத் துணையும் புரிவரே! குரலினை.

டக்கிற் கொழுத்திடுந் தீயர்கள்—மிகு
ன்னெஞ்சக் கொள்ளையர் வந்திங்கு
டக்கி நம் ஏழையர் பொருளெலாம்—வாரி
கிழக் கண்டுள்ளம் குமுறுதே! குரலினை.

மைகள் போக்கிடத் திராவிடர்—ஒன்று
ரண்டு குதிந்தனர் செயலிலே,
ுமைகள் ஊமைகள் அல்லர் காண்
டலேறு வழியினன் நாவென --குரலினை.

சிந்தித்துப் பாருங்கள்!

தமிழ் நாட்டில் ஒரு சிலர் "பல்கலைக் கழகம்" வேண்டாம்; "சர்வகலா சாலை" தான் வேண்டும் என்கின்றனர்.

"செயலாளர்", பொருளாளர்"-இவை அழகாயில்லை: கார்யதர்சி, பொக்கிஷதார் இவை தான் மிக அழகு என்கின்றனர்.

உரையாடலும் சொற்பொழிவும் புரியாது; சம்பாஷணையும் உபந்யாசமும் தான் புரியும் என்கின்றனர்.

"மக்கள் மன்றம்"; "அரசியல் அமைப்பு மன்றம்" என்றெல்லாம் கூறுதே; "ஜனப்பிரதிநிதி சபை" "ராஜீய நிர்ணய சபை" என்றே கூற என்கின்றனர்.

உணவும் உடையும் மனைவியும் சரிப்படா; போஜனமும் வஸ்திரமும் சகதர்மிணியும் தான் சரிப் படும் என்கின்றனர்.

"அமைச்சர்" வேண்டாம்——"மந்திரி" வேண்டும்; "வானொலி" வேண்டாம்— "ஆகாச வாணி" வேண்டும்; வானூர்தி வேண்டாம்-ஆகாய விமானம் வேண்டும்; தலைவர் வேண்டாம்-ஜனாதிபதி வேண்டும் என்கின்றனர்.

★

இப்படியெல்லாம் தமிழ்ச் சொற்களை விலக்கிவிட்டு வட சொற்களைப் பயன் படுத்தினுல் தான் தமிழ் வாழும் என்கின்றனர்.

இது உண்மையா?

முகமூடி தேவைதானா?

"தொடர்பன்"

சலசலவெனப் பாய்ந்தோடும் நீரோடையையும், பளிச் பளிச்சென மின்னும் மின்னலையும், வெண்ணிலவின் ஒளியினால் வெள்ளித் தட்டுகளைப்போல் ஒன்றோடு ஒன்று மோதும் அலைகளையும் பார்க்கக்கூடாது என்று தடுப்பது எப்படி உரிமையாகாதோ அதைப் போன்றுதான் எழுத்தாளர்கள் புனைபெயர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வதும் உரிமையாகாது.

எழுத்தாளர்கள் புனைபெயர்களைச் சூட்டிக் கொள்வதன் முறைகளும் காரணங்களும் தன்மைகளும் பல்வேறு வகைப்படும். தமக்குப் பிடித்த கவிஞர்கள், கலைஞர்கள், வீரர்கள் முதலியவர்களின் அன்பர்கள் என்று காட்டும் பெயர்களை ஒரு சிலர் சூட்டிக் காள்வார்கள். மற்றும் சிலர் தம் பெயரின் முதல் எழுத்தையும் தம் மனைவியின் பெயரின் கடைஎழுத்தையும் ஒன்றுசேர்த்து பெயர் இட்டுக் கொள்வார்கள். வேறு சிலர் தம் பெயருக்குத் தொடர்புடைய பெயர்களையெல்லாம் புனைபெயராக ஏற்றுக் கொள்வார்கள். சான்றாக ஒருவரின் பெயர் அண்ணாமலையாக இருந்தால் அவருடைய புனை பெயர்கள் சிவன், கூத்தாடி, பித்தன் என்பன போன்று இருப்பதுண்டு. தம் ஊர்களின் பெயர்களையே ஆரூரான், பொன்னம்பலத்தான், போரூரான், பூவாளூரான், ஈழத்தடிகள் என்று புனை பெயராக எடுத்துக் கொள்வோரும் உண்டு.

இப்படியெல்லாம் எழுத்தாளர்கள் தம் இயற்பெயர் இருக்க புனைபெயர் இட்டு எழுதி வருவதற்கெல்லாம் காரணம், ஒன்று தம் புனைபெயரில் அழகிருப்பதாக நினைப்பது; மற்றொன்று தம் ஆற்றலை பல்வேறு பெயரில் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலையில் இருப்பது. எடுத்துக் காட்டாக சிலர், தாம் அரசாங்க ஊழியராக இருப்பதால் நேரிடையான பெயரில் கவிதைகளையோ கட்டுரைகளையோ எழுத முடியாமல் புனைபெயர் வைத்துக் கொண்டாவது தம் உள்ளத்தில் ஊறும் கருத்துக்களைத் தெரிவிக்க முயன்று வருகின்றனர். இவ்வாறு அவர்கள் புனைபெயர் என்னும் முகமூடி அணிவதை நியாயமாக எதிர்க்க யாருக்காவது இடமுண்டா? நெருப்பாற்றின் மீதமைந்த மயிர்ப்பாலங்களையும் கற்பனை உலகையும் வரவேற்கும் இந்த நாட்டிலே, புனை பெயர்களைச் சூட்டிக் கொள்வதால் பெருந்தொல்லை விளையும் என்று சொல்வதற்கில்லை. அப்படி வைத்துக் கொள்வது பெரும்பாலும் பித்தலாட்டமே அல்ல என்று நான் அழுத்தந் திருத்தமாக கூறுவேன். விழிப்புற்றுவரும் நம் தமிழகத்தில் இன்று புற்றீசலெனப் பத்திரிகைகள் வெளிவந்தவண்ணமுள்ளன. பத்திரிகைகள் அதிகம். எழுத்தாளர்கள் கொஞ்சம். இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகைகள் மிகச் சிலவே இருந்தன என்பது உண்மையே. ஆனால் அப்போது எழுத்தாளர்களும் மிகச் சிலராகவே இருந்தனர். பத்திரிகை ஆசிரியர்கள் தத்தம் பத்திரிகைகளின் பெரும் பகுதியைத் தாமே எழுதித்தீர வேண்டிய கட்டாயத்தில் அன்றும் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர். எனவேதான்

'பல இதழாசிரியர்கள்,
நடத்தும் பத்திரிகையில்
களும் எழுதுகிறார்கள்
தெரிவிக்க தம் புனை
பெண்ணுடை தரித்துக்
டார்கள்; பலரும். எழு
கள் என்று காண்பிக்க பல
பெயர்களை அமைத்துக்
டார்கள்; வெவ்வேறு நி
ரும் தன்மையினரும் பல
ரும் எழுதுகின்றனர் என்
அறிவிக்க ஒன்றுக்கொ
முரண்பட்ட அல்லது
பட்ட புனைபெயர்களை நி
தினார்கள். வெவ்வேறு
உணர்ச்சிகளைப் படிப்பவர்
ளத்தில் எழுப்பவேண்டும்
எண்ணம் எழுந்தபோது
தந்த சுவைக்கேற்ற புனை
களை, எடுத்துக்கொண்ட
டுரையின் சுவைக்கேற்பச்
வும் முந்தினர். இதழா
கள் நிலையில் இருந்து பார்
எவரும் இவையெல்லாம்
லும் தவறு என்று அடி
பேச முடியுமா?

மற்றொன்று. புனைபெயர்
சூட்டிக் கொள்வது
மக்களின் அறிவுக்கு எந்த
திலும் தடை விதிக்க
என்பதை நாம் நன்கு கவ
வேண்டும். எனவே புரட்
உண்டாக்கிய மாஜினி, கரிப
சாக்ரட்டிஸ் என்பவர்க
புனை பெயர்களை வை
கொண்டு எழுதும் எழுத்
களின் எழுத்துக்களைக்
இந்த எழுத்துக்களின் தர
கேற்ப மதிப்பளிக்க வேண்
ஒழிய, வெறும் புனைபெ
மட்டும் பார்த்துவிட்டு
மருள வேண்டியதே இல்லை

தம்மைப் புனைபெயர் மு
யுள் மறைத்துக்கொண்டு, தம்
திற்கோ, சூழ்நிலைக்கோ அ
பட்ட—முகமூடியில்லா
சொல்ல முடியாத—சொ

(11-ம் பக்கம் பார்க்க)

தேசியப் பத்திரிகைகள்!

பாரதிதாசன்

ந் நாட்டின் தேசியப் பத்திரி
கின் இன்றைய போக்கு
இருக்கிறது என்பதுபற்றி
அபிப்பிராயத்தை விளக்கும்
ன் தோழர்கள் சிலர் என்னை
ருக்கிறார்கள்.

து :

னவே போட்ட திட்டப்படி
ன் வீட்டின் எதிரில் பஸ்
நின்றது. இதில் சங்கரன்
கள் சுமார் பத்துப் பேர்
சங்கரன் மனைவியும், சங்க
யும், ஏறி உட்கார்ந்தார்கள்.
ா நடக்கும் ஊர் சுமார் 40
ளுக்கு அப்பால் இருக்
பஸ் புறப்பட்டது. சங்க
ன் தாயை நோக்கி ஆரம்
ன்.

ம்மா எனக்குப் பால்
டுவந்து வைத்தீர்களே,
செம்பு பொத்தற் செம்பு
த நீங்கள் கவனிக்கவே
போலிருக்கிறது என்று
சாந்தமாகவும் மரி
கோனதமுறையிலும் கேட்

க்குத் திடுக்கென்று எடுத்
பாட்டது. ஐயோ அப்பா
வனிக்கவேயில்லையே, பால்
ம் ஒழுகிவிட்டதா என்று
ளள் அவள்.

ரன்:—பக்ஷணம் சாப்பிட்ட
லைப் பார்த்தேன். எல்லாம்
மேல் ஓடியிருந்தது. செம்
ளிகூட இல்லை. நான் பக்ஷ
ாப்பிடுவது கொஞ்சம், என்
ஆகாரவு பால்தான், ஏன்
க்குத் தெரியாதா? தெரிந்
னே அம்மா.

:—ஆம் அப்பா நான் கவ
வயில்லை. பசியாக இருக்
என்ன பண்ணலாம்!

ரன்:—முதலில், பிள்ளை
ன்மையில் தாய்க்கு அக்
ருக்கவேண்டும். எப்போது
றும் மருமகள் மேலும்,
ர்கள் மேலும் வாழ் வாழ்
கத்தினுல் மாத்திரம் போது
ரண்டாவது, அடிக்கடி உப

யோகிக்கும் பாத்திரத்தின் நிலையை கவனிக்கவேண்டும். அது சமுசாரிக்கு அழகு. ஏதோ குடும்பத்தில் பெரிய அநுபவசாலிபோல் நீட்டினுல் மாத்திரம் போதுமா? மூன்றாவது, பிள்ளை சாப்பிட்டு முடித்தானு என்பதைக் கடைசி வரைக்கும் இருந்து கவனிக்க வேண்டும். அவன் சாப்பிட்டால் என்ன, ஒழிந்தால் என்ன என்ற மனுேபாவம் கூடாது. பலகாரம் வைத்தீர்கள். அதில் ஓர் இட்லி கூடச் சாப்பிடவில்லை. பாலைப் பார்த்தேன், ஒரு துளி? பசி காதை அடைக்கிறது.

இந்த வார்த்தைகளையெல்லாம் சங்கரன் பஸ்ஸிலிருந்த தன் பந்துக்களில ஒவ்வொருவரையும் மாற்றி மாற்றி முன்னிலைப்படுத்திச் சொல்லிக்கொண்டிருந்தான். அனைவரும் சங்கரன் தாயை வெறுத்தார்கள். சங்கரனை ஆதரித்துப் பேசினுர்கள். அப்போது சங்கரன் தாயார் முகத்தைப் பார்க்கவேண்டுமே!

பஸ் அடுத்த ஊரில் ஓர் விறகுக் கடையண்டை நிற்கும்படி சங்கரன் சொன்னுன். அது விறகுக் கடை என்பது சங்கரனுக்கு நன்ருய்த் தெரியும்.

விறகுக் கடையில் மனிதர் நின்றுர்கள். சங்கரன் கடைக்காரனைப் பார்த்துக் காப்பி இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, என் தாயார், எனக்குப் பொத்தற் செம்பில் பால் கொண்டுவந்து வைத்தார்கள். அந்த அநியாயக்காரி அப்படிச் செய்ய நினைத்தால் அந்த ஆபத்திலிருந்து எப்படி நான் தப்பமுடியும்! தாயை நம்பவேண்டுமா? நம்பவேண்டாமா? பலகாரமும் சாப்பிடவில்லை பாலை நம்பி. செம்பில் பால் துளிகூட இல்லை என்று சொன்னுன். அங்கிருந்த அனைவரும் சங்கரன் தாயைக் கொடுங் கண்ணுல் ஒரு முறை பார்த்துவிட்டு, இந்தப் புண்ணியவதிதான் உமது தாயோ என்று கேட்டார்கள். தாய்க்கு இதயம் பிளந்துவிடும் சமயம் பஸ் புறப்பட்டது.

சங்கரன் தாய் சொன்னுள்: நான் வேண்டுமென்று செய்யவில்லை அப்பா.

இந்த வார்த்தையை அவள், அடிமை ஒருவன் ஆண்டானிடம் மன்னிப்புக் கேட்கும் முறையில் சொன்னுள். சங்கரனும், அம்மா அதனுல் இப்போது என்ன முழுகிப் போய் விட்டதுஎன்று வெகு வினயமாகப் பதில் கூறினுன்.

பஸ்ஸில் எண்ணெய் ஆகிவிட்டதால் அடுத்த நகரின் ஷெட்டில் இருந்த கடையில் பஸ்ஸை நிறுத்தினுன் டிரைவர். சங்கரன் அங்கிருந்த கூட்டத்தை நோக்கி, இங்கே காப்பி அகப்படுமா என்று கேட்டான். சங்கரன் எதிர் பார்த்தபடியே "கிடைக்காது" என்ற பதில் கிடைத்தது. இதோ இந்தம்மாதான் என் தாயார். காலையில் என்னைப் பட்டினி போட்டு விட்டார்கள் என்று தொடங்கி வெகு உருக்கமாக முடித்தான். தன் தாய் ஓர் அன்பற்ற மிருகம் என்ற இந்தப் பிரசாரத்தின்பின் பஸ் புறப்பட்டது.

அடுத்த ஊர்ச் சத்திரத்தில் அனைவரும் இறங்கினுர்கள். போஜனம் முடிந்தது. சங்கரன் நன்ருகச் சாப்பிட்டான். தான் சாப்பிடவே இல்லையென்றும், அதற்குக் காரணம் காலைப் பட்டினி என்றும், பட்டினிக்குக் காரணம் தன் தாயின் சூழ்ச்சியென்றும் அடுக்காகப்பேசி அங்கிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு, ஓர் தீய அன்னைக்கு உதாரணமாகத் தன் அன்னையைக் காட்டி நிரூபித்தான். பஸ் புறப்பட்டது.

பஸ்ஸிலிருந்த சொந்தக்காரர்கள்சங்கரனின் நிலைமைக்கு வருந்தினுர்கள். நடுவழியில் அவனுக்கு மரணம் நேர்ந்துவிடுமல்லவா? தான் செய்தது தப்புத்தானே என்ன பண்ணுவாள் தாய்.

செம்பில் துவாரமிருந்ததைத் தாய் அறியவில்லை. இது உண்மையான சங்கதி, இதுபற்றித்தான் இத்தனை அவமானப்பட வேண்டுமா? என்று அவள் நினைத்தாள். மற்றவர்களிடம் இது பற்றிக்கூறி, அபவாதத்திலிருந்து தன்னை மீட்க நினைத்தாள். அதுதானே முடியாது. தன் பிள்ளைக்குத் தான் செய்தது குற்றமா அல்லவா? சும்மா இருந்துவிட்டாள் தன் சுபாவப்படி!

திருவிழாவுக்குத் தமது ஊரார் எல்லாரும் வந்திருந்தார்கள். அவர்கள் கட்டாக அனைவரும் ஒரு சத்திரத்தில் இறங்கி இருந்தார்கள்.

சங்கரன் தன் ஊராரை எல்லாம் ஒரு முகப்படுத்தி, ஒரு வைத்தியர் இங்கு கிடைப்பாரா என்று கேட்டான். "இல்லை", என்று மாத்திரம் அவர்கள் சொன்னார்கள்; ஏன் வைத்தியம் என்று அவர்கள் கேட்கவில்லை ஏன் என்று கேளுங்கள் என்று சங்கரன் சொன்னான். எதற்காக வைத்தியர் என்று அவர்கள் கேட்டார்கள். கதையை ஆரம்பித்தான் சங்கரன். ஒருவாறு முடித்தான். தன் தாய்மேற் பழியை சுருக்கமாக முடிந்துவிட்டதாக நினைத்தான். மேலும் சொல்லுகிறான்: என்னைப் பட்டினி போட வேண்டும் என்ற நோக்கத்தோடு பொத்தற் செம்பில் பாலை வைத்தாள் தாய். பெற்றவளாயிருந்தால் அப்படிச் செய்வாளா, என் உடம்பின் நிலை இவளுக்குத் தெரியாததல்லவே? காலைப் பட்டினியால் என் உடல் தத்துக் குத்தலாயிற்று. என் பந்துக்கள் இதோ இருக்கிறார்கள். இவர்களில் ஒருவராவது என் தாயின் அட்டூழியத்தை ஆதரிக்கிறார்களா? கேளுங்கள். அது போகட்டும்.

அங்கொரு கடையில் பலர் கூடி இருந்தார்கள். என் தாயார் செய்கையைக் கூறினேன். எவராவது அவள் செய்தது சரி என்று ஒத்துக் கொண்டார்களா? அந்த நகர மக்களில் யாராவது இவளைத் தூற்றாமல் இருந்தார்களா? சத்திரத்தில் ஆயிரக் கணக்கான மக்களிடம் சொல்லிக் காட்டினேனே, அவர்களில் இவளை எவன்தான் காறி உமிழவில்லை? உங்களில் யாருக்குத்தான் பிடிக்கிறது இவள் செய்கை. என்மீது உங்களுக்கெல்லாம் இத்தனை இரக்கம் ஏன் உண்டாகிறது

என்று கூறி முடித்தான். இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர், அந்தம்மாவின் வாக்குமூலம் என்ன என்று கேட்டார்கள்.

தாய்: பொத்தற் செம்பிலே பால் வைத்ததாகச் சொல்லுகிறான் பிள்ளை.

சிலர்: உங்கள் பிள்ளைதானே

தாய்: ஏன் கேட்கிறீர்கள்?

சிலர்: பின் என்ன? பெற்ற தாயாயிருந்தால்-இந்தப் பிள்ளை சொந்தத் தாயைப் பற்றி இவ்வளவு பேர் அறிய—இத்தனை ஊர் அறிய உங்கள்மீது பழி கூறித் திரிவாரா?

தாய்: நான் பெற்றால் என்ன பெருவிட்டால் என்ன அவன் என் பிள்ளைதான்.

சிலர்: உம் வயிற்றில் பிறந்த பிள்ளையா?

தாய்: இது என்ன கேள்வி?

சங்கரன்: இவள் என்னைப் பெற்றவளாயிருந்தால் இப்படிச் செய்வாளா? என் மாற்றாந்தாய் அவள்.

சிலர்-ஐயோ அந்தம்மா உன்னை விலக்கவில்லையே, அந்தம்மா உனக்குச் செய்ததுதான் என்ன? பொத்தற் செம்பில் பால்வைத்த தாய்ச் சொல்லுகிறாய். தாயினிடம் காட்டவேண்டிய மரியாதை, அன்பு, பொறுப்பு ஒன்றுமே கிடையாது.

சங்கரனுக்குக் கோபம் வந்துவிட்டது உங்களை எல்லாம் ஞாயம் கேட்க வரவில்லை என்று கூறினான். ஊராருக்கு உணர்ச்சி சிறிது உண்டாகி வருவது பற்றி அவனுக்கு ஏற்பட்ட வருத்தம் சொல்லமுடியாது.

பஸ் ஊருக்குவந்து சேர்ந்தது. தாய் வீட்டில் நுழைந்தாள். அவள் தன் பிள்ளைக்குப் பால்வைத்த செம்பு அப்படியே மேஜைமேல் இருந்தது. அதில் தண்ணீரை ஊற்றிப் பரிசோதித்தாள். செம்பில் பொத்தல் இல்லை.

* * *

இனிமேலாவது தேசியப் பத்[திரி]கைகள் சங்கரன்போல் இராம[ல்] தமிழ்நாடு என்னும் தாயின் [ம]டில் பொறுப்போடும் அன்போ[டு] தொண்டு செய்க.

பொன்னி

1947 நவம்பர்

இதழ் வெளிவந்துவிட்ட[து]

தோழர்கள்

* ம. ப. பெரியசாமி
* பரலி. சு. நெல்லையப்பர்
* கே. ஜி. இராதாமணாளன்
* முருகு சுப்பிரமணியன்
* டி. கே. சீனிவாசன்
* கு. பு. நவநீத கிருஷ்ணன்
* தில்லை வில்லாளன்
* வீ. சு. திருநாவுக்கரசு
* நக்கீரன்

முதலியோர் எழுதியுள்ளன[ர்]

விலை அணா 8.

எல்லா ஊர்களிலும் கிடைக்கு[ம்]

'பொன்னி' அலுவல[கம்]

புதுக்கோட்டை

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

காப்பாற்றியவனையும் பிறகு தாக்கிய அந்த மக்கள் மே ஜாதிக்காரர்கள்!

ஆம்! ஜாதி ஆணவம், ஒரு உத்தமனைத் தாக்கிற்று. வர்ணாஸ்ரமம் உயிரைக் காப்பாற்றிய ஒருவனைச் சித்திரவதை செய்தது. அதனிடத்தில் மக்களுக்குள்ள நம்பிக்கை, நீதி—நேர்மை—மனிதப்பண்பு—இரக்கம்—அன்பு—நன்றி அத்தனை குணங்களையும் அவர்கள் உள்ளத்திலிருந்து விரட்டி விட்டது. என்ன விபரீதமான நிலை! எவ்வளவு வெட்கக் கேடான சம்பவம்!

இந்தியருக்குத் தென்[...] பிரிக்க அரசியலார் [...]டு இழைக்கின்றனர் என[...] உ[...] மன்றத்தில் முறை[...]கிறு விஜய லட்சுமி பண்டிட், அ[...] டத்தில் தளபதி ஸ்மட்ஸ் இ[...] நிகழ்ச்சியைக் காட்டினால் என் சொல்வார் விஜய லட்சுமி ப[ண்]டிட்? என்ன சொல்ல முடி[யும்] வெட்கத்தால் தலை குனி[ந்து] கொள்வது தவிர?

சாவேரி ராகம்

*

தொடர் கதை

*

அடுத்த இதழில்

தன்மான இயக்கத் தத்துவம்

[பெரியார் ஈ. வெ. ரா.]

[சுயமரியாதை இயக்கம் எந்தெந்தத் துறைகளில் "பழமை" அரசோச்சுகிறதோ அங்கெல்லாம் சென்று சென்று புரட்சித் தீயினை மூட்டி வருகிறது. அதன் தாக்குதல் பல முனைகளிலும் ஒரே காலத்தில் நிகழ்ந்து வருவதால், அதன் அடிப்படைத் தத்துவம் என்ன என்பதை அறியாமல் பலரும் திகைக்கின்றனர். அந்தத் திகைப்பை மாற்றி உண்மையை விளக்குகிறார் பெரியார் இந்த அரிய கட்டுரையில்.]

சுயமரியாதை இயக்கம் ஒவ் ...ரு மனிதனையும் முதலில் ...னை மதிக்கச் சொல்லுகிறது. ...னை மதிப்பது என்றால் தனது ...சேந்திரியங்களையும் அதாவது ...ய், வாய், கண், மூக்கு, செவி ...ய இவைகளால் ஏற்பட்ட ...த்தியக்ஷ அநுபவங்களைக் கொ... ஆராய்ந்தறிந்த உண்மையை ...க்கச் சொல்லுகிறது. இன்று ...த சமூகத்தில் பெரும்பாலான ...கள் அநேக காரியங்களில் இந்த ...மையை மதிப்பதில்லை, அநேக ...யங்களுக்கு இந்த அனுபவங் ...ப் பொருத்துவதில்லை.

...னிதன் உலகிலுள்ள மற்ற ஜீவ ...களை விட மேலானவன் என் ...ற்கு எடுத்துச் சொல்லும் ஆதா... மற்ற ஜீவன்களுக்குஉள்ளதை ... மேலான ஐம்புலன் உணர்ச்சி ...ப்பதுதான் என்று சொல்லப் ...றது இதைத்தான் சுயமரி...தை இயக்கமும் ஆதரித்து ...வகளை மரியாதை செய், அவற் ...கு மதிப்புக் கொடு, அவற்றின் ...ப்படி நட என்று சொல்லு...து.

...தனுக்குண்டான ஆலோ... ...ம் தன்மையும் பகுத்தறிந்து ...ய்ச்சி செய்யும் தன்மையும் ...னுக்கு அமைந்துள்ள பஞ் ...திரிய சக்தியால் மற்ற எல்லா ...ராசிகளையும் விட மேலான ... இருக்கிறது. அதை மனிதன் ...னபடி உபயோகிக்காமலும் ...படி பயன் படுத்திக் கொள் ...ல் மிருகப் பிராயத்திலும் ... வாழ்கிறான் என்பதை பல ...ங்களிலும் பலர் விஷயங்களிலும் காண்கிறோம். உதாரணமாக மனிதன் தனது புலன்கள் உணர்ச்சிக்கு தேவையான சிலகாரியங்களை எப்படி பரிசோதித்து பிரத்தியக்ஷ அனுபவத்தைக்கொண்டு நடந்து கொள்கிறானோ அது போல் வேறு பல காரியங்களில் நடந்து கொள்வதில்லை. இது விஷயமாக உங்களுக்கு உதாரணங்கள் எடுத்துக் காட்டவேண்டுமானால் :—

ஒரு மனிதன் உங்களிடம் வந்து ஒரு அணா நாணயத்தைக் கொடுத்து அதற்கு செம்புக்காசுகளாக சில்லறை கேட்பானேயானால் நீங்கள் அந்த நாணயத்தை பரிசோதித்துப் பார்த்து உங்களுக்கு திருப்திப் படும்படியான மாதிரியில் சோதனைகள் செய்த பிறகுதான் அதற்கு சில்லறை கொடுப்பீர்கள்.

ஒருவன் உங்களிடம் வந்து ஒரு பணவிடை பொன்துண்டை கொடுத்து அதற்கு அரை விலை கொடுக்கும்படி கேட்டாலும் நீங்கள் அத்துண்டை உரைத்துப் பார்த்து, எடை பார்த்துக்கொண்டு வந்த ஆளின் யோக்கியதையையும் பார்த்து பிறகுதான் அதை வாங்குவீர்கள். நீங்கள் சாப்பிடுவதிலும் அனுபவ விஷயத்திலும் இப்படியே ஆராய்ச்சி செய்து அனுபவப் பட்டு பார்த்தே பின்பற்றுகிறீர்கள். ஆனால் நீங்கள் உங்கள் உயிரினும் பெரிதாய்க் கருதும் மதம் அல்லது சமயம்—மார்க்கம் என்கின்ற விஷயங்களிலும், நீங்கள்உயிரோடு வாழும்போதும் நீங்கள் முடிவெய்திய பின்பும் அதாவது செத்த பிறகும் உங்களுக்கு மேன்மையை அளிக்கவல்லது என்று கருதி வணங்கும் கடவுள் அல்லது தெய்வம் என்னும் விஷயத்திலும், அதற்கு ஆக உங்கள் வாழ்நாளில் நல்ல பாகத்தையும் உங்கள் செல்வத்தின் குறிப்பிடத் தக்க பாகத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் செலவழிக்கும் காரியங்களிலும் மேல்கண்ட அதாவது ஒரு அணாவுக்கு சில்லறை கொடுக்க எடுத்துக்கொண்ட ஜாக்கிரதை ஆராய்ச்சி பகுத்தறிவு பிரயோகிக்கின்றீர்களா என்று யோசித்துப் பாருங்கள்.

சுயமரியாதை இயக்கம் மக்களுக்குப் போதிக்கும் முதல் காரியம் இதுதான்.

ஏனெனில் இந்த ஒரு காரணத்தாலேயே மனித சமூகம் பகுத்தறிவு உடையது என்று சொல்லப் பட்டும் கூட மிருகத்தை விட மற்றும் கீழான ஈரறிவு மூவறிவு பிராணிகளை விட கேவலமாக நடந்து கொண்டு மக்களை மக்கள் பகைத்துக்கொள்ளுகிறார்கள். மக்களை மக்கள் பிரித்துக் கொள்ளுகிறார்கள். மக்களிடம் மக்கள் துவேஷம் வெறுப்புக் காட்டி மனித சமூகத்திற்கே ஒற்றுமையும், சாந்தியும், திருப்தியும் இல்லாமல் இருக்கச் செய்துகொள்கிறார்கள். இந்தத் தன்மை ஒன்று மாறினால் தான் மனித சமூகத்துக்குள் ஒரு மாபெறும் மாறுதல் காணலாம். சுகமும் சந்தோஷமும் நீடித்த இன்ப வாழ்வும் காணலாம். ஆதலாலே சு. ம. இயக்கம் மனிதனைத் தனது அறிவையும், ஆராய்ச்சித் திறனையும் பயன்படுத்தி எம் முடிவையும் செய்யும்படி போதிக்கிறது, வேண்டிக்கொள்ளுகிறது.

இந்தக் காரியங்களுக்கு இணங்க முடியாதவர்களுக்கும், இணங்கத் தக்க அறிவும் ஆற்றலும் அற்றவர்களுக்கும், மக்கள் உயர்வு அடைந்துவிட்டால் தங்களது வாழ்வும் மேன்மையும் ஒழிந்துவிடுமே என்று கருதும் சுய நலக்காரர்களுக்கும் மோசக்காரர்களுக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

22—11—47 சனிக்கிழமை

காணாத கண்கள்! கேளாத செவிகள்!

கண்கள் காணவில்லை! செவிகள் கேட்கவில்லை!

கண்களிலே ஒளி யிருக்கிறது; கீழ்த்திசையும் மேற்றிசையும் வடபுலமும் தென்புலமும் மாறி மாறி நோக்கும் தன்மை இருக்கிறது; அங்கும் இங்கும் பாய்ந்து பாய்ந்து பரவும் பண்பு இருக்கிறது; ஆனாலும் கண்கள் காணவில்லை! விரைவில் காணும் என்ற எண்ணமும் நமக்குப் பிறக்கவில்லை.

செவிகள் கேட்குந் தகுதியுடையனவே; கூர்த்தநுண்மதி இயற்கையிலேயே அமைந்த பெற்றி உடையனவே; எங்கெங்கோ எவரெவரோ பேசும் மென்மொழிகளையும் கேட்டு அறியும் வல்லமை வாய்ந்தனவே என்றாலும் செவிகள் கேட்கவில்லை! கேட்கும் என்ற நம்பிக்கையோ நமக்குத் தோன்றவில்லை.

காணத் தெரிந்தும் காணாத கண்கள்! கேட்க முடிந்தும் கேளாத செவிகள்! "காணுங்கள்! கேளுங்கள்!" என்ற குரல் ஒலியோ நாற்றிசை முற்றிலும் கேட்கிறது—கேட்டுந்தான் கண்கள் காண மறுக்கின்றன; செவிகள் கேட்க மறுக்கின்றன.

"ஐயா கொஞ்சம் கேளும்! சற்றே கண் திறந்து பாரும்!" — ஒரு முறையா இரு முறையா இந்தக் குரல் எழுந்தது? இல்லை இல்லை, பலமுறை எழுந்தது; அடுத்தடுத்து எழுந்தது; மறுபடியும் மறுபடியும் எழுந்தது; மீண்டும் மீண்டும் எழுந்தது; எழுந்துந்தான் என்ன? கண்கள் காணவில்லை! செவிகள் கேட்கவில்லை.

மாநாடுகள், முறையீடுகள், கண்டனங்கள், பேட்டிகள், இதோபதேசங்கள், தீர்மானங்கள், வாழ்த்துரைகள், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் அத்தனை முறைகளாலும் தமிழ்ப் புலவர்கள் தூங்காமல் தூங்கும் கண்களையும் செவிகளையும் எழுப்ப முயன்றனர். ஆனால் முடியவில்லை! முடியாததில் வியப்புமில்லை. தூங்கும் கண்களையும் செவிகளையும் எழுப்பலாம்; எழுப்பமுடியும்; எழுப்புவது எளிது. ஆனால் தூங்குவதாக நடிக்கும் கண்களை—செவிகளை எங்ஙனம் எழுப்ப இயலும்?

சென்னை அரசியலார் கண்ணிருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராய் உள்ளனர்—தமிழ்ப் புலவர்களைப் பொறுத்த மட்டில். அவர்களுக்குக் காணத் தெரியாதோ—தெரியும்! கேட்க அறியாரோ? அறிவர். அறிந்துந்தான் காணவும் கேட்கவும் மறுக்கின்றனர்.

தமிழாசிரியர்கள்
வாழ்க்கையில் வேத
புயல் வீசாத நேரமில்
அந்தப் புயலிற் சிக்
சிதையாத தமிழாசி
குடும்பங்களும் இல்
வறுமை ஒவ்வொரு தமி
புலவர் வீட்டையும்
ஆண்டுகளாகவே தா
வருகிறது. பல ஆ
களாகத் தாக்குகிறே
என்ற இரக்க உணர்
யால், வறுமை, அவர்
மீது செலுத்தும் தா
தலை நிறுத்தவும் இல்லை

வறுமைதானே! அ
தமிழ்ப் புலவர்களின் ப
பரைப் பாத்தியம் ஆ
றே! அதை இப்போ
உதறுவது நல்லது
லவே என்று கூறுதற்
இல்லை. அது போ
பற்பல பரம்பரை பாத்
களை மிக வேகமாக உத
தள்ளும் காலம் இது.

வெள்ளைப் பரங்கி
துரை என்ற காலத்தி
சரி, மாய்ந்தது மறை
பரங்கியர் ஆட்சி என்
பண் பாடப்படும்
காலத்திலும் சரி, தமி
புலவர்களின் வாழ்க்
உயிர் கொன்று தின்
கானலாகவே உள்ள
அந்த நிலை மாறவில்
மாறும் என்ற அறிகுறி
தோன்றவில்லை. பா
நிலத்தில் வதையும் புல
களை பூந்தோட்டத்தி
அழைத்துச் செல்
முயற்சி இல்லாவிட்
போகிறது; எண்ணம்
இருப்பதாகத் தெ
வில்லை சென்னை அர
லார்க்கு!

தமிழாசிரியர்கள்
தகுதிக்கும் தேவைக்

றந்த ஊதியம் பெற்று
ழ்க்கையில் ஊசலாடு
ு தமக்குத் தெரியாது
ன்று சொல்லித் தப்
த்துக் கொள்ளவும் முடி
து அரசியலார். ஏனெ
ல் தமிழாசிரியர்கள் பல
றை கல்வி அமைச்சர்
வர்களை நேரில் கண்டு
குறைகளைத் தெள்ளத்
ளிய உணர்த்தி யிருக்
றனர்.

அமைச்சரைப் பல
றை சென்று கண்டதன்
ளக ஒரு சேதி நன்கு
ங்குகிறது. தாய்மொழி
ர்வு குறித்துப் பேச்
வில் பேசுவது அல்லா
அத்தாய்மொழி வளர்
க்குழைக்கும் தமிழ்
ிரியர்கள் நிலையை
ர்த்தவோ, ஊதியத்தை
திப் படுத்தவோ, அவ
குச் சிறிதும் எண்ண
லை." என்று தமிழா
யர்கள் அண்மையில்
த்துள்ள அறிக்கை
றுகிறது.

இது உண்மையாயின்,
ழகம் தலை கவிழ
ண்டும், தம்மை ஆள
தவர்கள் இத்தகு நிலை
தமிழாசிரியர்களை
த்தியது குறித்து

ஜர்மன் நாட்டிலே
ர்மானிய மொழிப் புல
ளுக்குத் தக்க ஊதியம்
டியாது என்று அந்த
டு அரசாங்கம் கூறாது;
காலி நாட்டிலே இத்
மொழிப் புலவர்களைத்
க்க வாரம்" கொண்
ம் நிலைக்குத் துரத்தி
அந்த நாட்டு ஆட்சி;
கிலாந்திலே ஆங்கில
ழிப்புலவர்கள் தம்

வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகச் சிறையும் புகுவோம் என்று கூறித் தீர வேண்டிய கட்டம் வரவே வராது. ஆனால் துர்ப்பாக்கியம் மிக்க தமிழ்நாட்டிலே தான் தமிழ்ப் புலவர்கள், தமிழைப் போதிக்கும் ஒரு குற்றத்திற்காக, வாழ்க்கையிலே வதைபட்டு, உலகியலில் ஒதுக்கப்பட்டு, தமிழ் அமைச்சராலும் போற்ற மறுக்கப்பட்டு, துக்க வாரம் கொண்டாடி, தம் துயர்தரு காதையைப் படித்துக் காட்டி, தம் துன்ப நிலையினின்றும் மீள்வது அன்றி அதைக் குறித்து நடத்தும் பெருங் கிளர்ச்சியில் மாளுவது என்று சூள் உரைக்க நேர்ந்திருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சி யொன்று தமிழ்நாட்டு வரலாற்றில் பொறிக்கப்பட நேர்ந்தது தமிழ்க்கும் தமிழ் மொழிக்கும் தமிழரை ஆள்பவர்க்கும் பெருத்த அவமானம் தரத் தக்கது.

தமிழ்ப் புலவன் பாரதிக்கு மணிமண்டபம் எழும் நாட்களில், தமிழ் உலகிற்குக் கலைக் களஞ்சியம் தேடித் தர முயலப்படும் நாட்களில், அதற்குப் பன்னிரண்டு இலட்சம் வெண்பொற் காசுகள் வழங்கத் தமிழகம் "தயார்" கூறும் நாட்களில், மாணவர்க்குத் தமிழ் உணர்ச்சியை நாளும் குழைத்தூட்டும் தமிழ்ப் புலவர்கள் "துக்க வாரங்" கொண்டாடி, துக்கம் தீரவில்லையேல் துக்கம் புரட்சியாக மாறும் எனக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கக் கூடாது. ஏற்படும்படி அரசியலார் விட்டிருக்கக் கூடாது.

"அரசாங்கம் இம்முறையீட்டுக்கும் செவிசாய்க்க மறுக்குமானால் வேறு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம் என்பதனையும், அத்தகைய தியாகத்துக்கு எங்களிடையே பல பெரியோர்களும் இளைஞர்களும் உள்ளனர் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்." என்று தமிழாசிரியர்கள் துக்கவார அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். நாம், கூறுகிறோம், அத்தகைய தியாகத்திற்கு அவர்களிடையே மட்டுமல்ல, தமிழ்ப் பொதுமக்களிடையேயும் உண்டு ஆயிரமாயிரவர். தமிழாசிரியர்கள் வாழவில்லை எனில் தமிழ் வீழ்ந்தது என்று பொருள். தமிழர் வாழ்வு சிதறுண்டு போயிற்று என்று பொருள்; தமிழகம் தாழ்ந்தது என்று பொருள்; அந்த நிலை ஏற்படத் தமிழகம் ஒருக்காலும் இசையாது.

சென்னை அரசியலார், எந்தக் காரணத்தை முன்னிட்டேனும், தமிழ்ப் புலவர்தம் நிலையை உயர்த்த மறுப்பராயின் — மறுக்கும் அளவுக்கு அவர்கள் உள்ளத்தில் பண்பாடு அற்றுப் போகும் என்று நாம் எண்ணவில்லை — மறுத்ததன் விளைவாகப் புலவர்கள் போர் தொடுக்க நேருமாயின் தமிழர்கள் திரள் திரளாய்க் குழுமி, நிரல் நிரலே அணிவகுத்து நிற்பர் அவர்களுடைய பட்டாளத்தில்— கட்சி வேற்றுமையின்றி;

(8-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வியக்கம் குற்றமாய், நமனைக் காணப்பட்டு இவ்வியக்கத்தை இழித்துப் பழித்துக் கூறி மூடப் பிரச்சாரமும், விஷமப் பிரச்சாரமும் செய்ய வேண்டியதாகிவிடுகின்றது.

இதன் பலன்தான் சுயமரியாதை இயக்கமென்றால் அது "நாஸ்திக இயக்கம்" என்றும் ஒழுக்கமற்ற இயக்கம் என்றும் மடையர்களும் அயோக்கியர்களும் சொல்லித் தீர வேண்டி இருக்கிறது. இதைக் கேட்டுக்கொண்டு ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்திப் பார்த்து முடிவுகாண சக்தியற்ற மக்கள் பலர் இதை நம்பிக்கொண்டு மூடர்களாக வாழவேண்டியவர்களாகவும் ஆக்கப்பட்டு விடுகிறார்கள்.

கடவுளையோ மதத்தையோ மாத்திரம் கருதி ஆரம்பிக்கப் பட்ட இயக்கமல்ல இந்த சுயமரியாதை இயக்கம்.

எந்தக் காரியத்தையும் ஆராய்ந்தறிந்து செய்யவேண்டும் என்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டதாகும்.

மனிதன் எந்த மதஸ்தனைகவும் எப்படிப்பட்ட கடவுளை அல்லது கடவுள்களை உண்மை என்று நம்புகிறவனுகவும் இருந்தாலும் நமக்குக் கவலை இல்லை. ஆனால் அவன் அவற்றைத் தனது அனுபவத்தால் ஆராய்ந்து பார்த்து அம்முடிவுக்கு வந்தானா இல்லையா என்பதைப் பற்றித்தான் சுயமரியாதை இயக்கத்துக்கு கவலை உண்டு.

இதனால் யாரும் கவலைப்படவேண்டியதில்லை. அநேக மதவாதிகள் என்பவர்கள் எந்த தனிப்பட்ட மதத்தைப் பற்றியும் சிந்தியாமல் "எம் மதமும் சம்மதம்" என்று சொல்லி இருக்கிறார்கள் என்பது ஒரு புறமிருந்தாலும், அநேக பெரியார்கள் "அன்புதான் மதம்" என்கிறார்கள், "சத்தியம் பேசுவதுதான் மதம்" என்கிறார்கள். "மக்கள் துயர் களையும் தொண்டாற்றுவது தவிர்த்த வேறு மதம் இல்லை" என்கிறார்கள். சுயமரியாதை இயக்கம் இந்த மதங்களை ஆட்சேபிப்பதில்லை. ஏற்றுக் கொள்ளவும் தயாராய் இருக்கிறது. அதுபோலவே கடவுளைப் பற்றியும் அநேகர்களால் ஒப்புக் கொண்ட பெரியார்கள் அன்பே கடவுள் அருளே கடவுள் அறிவே கடவுள் சத்தியமே கடவுள் வேறு கடவுளே இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள்; இன்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கடவுள்கள் விஷயத்தில் சுயமரியாதை இயக்கம் தகராறு செய்வதில்லை. ஏற்றுக்கொள்ளச் சொன்னாலும் தயங்குவதில்லை. இப்படிப்பட்ட மதமும் கடவுளும் மனித சமூக வாழ்வுக்கு ஒரு அளவில் இன்றியமையாதன என்றுகூட சுயமரியாதை இயக்கம் ஒப்புக் கொள்ளத் தயார் தான்.

ஆனால் இவை அல்லாத கடவுள்கள் மனித சமூக ஒற்றுமையான அன்பான வாழ்வுக்கும் ஒழுக்கத்துக்கும் எவ்வளவு கேட்டை நடைமுறையில் உண்டாக்கி இருக்கின்றன என்று பாருங்கள்.

ஒருவன் கடவுளை மற்றவன் ஒப்புக் கொள்வதில்லை. ஒருவன் மதத்தை மற்றவன் ஒப்புக்கொள்ளுவதில்லை. இதை நாம் எல்லோரும் நடைமுறையில் பார்க்கிறோம். ஒருவன் பசுவை கடவுளாகக் கும்பிடுகிறான். ஒருவன் பசுவை அறுத்து சாப்பிடுகிறான். ஒருவன் மதம், பிரார்த்தனை கொட்டு முழக்கு தப்பட்டை சத்தம் வேண்டாம் என்கின்றது. மற்றவன் மதம் பிரார்த்தனை, மணி, சேகண்டி, சங்கு, மேளம், நகார், வேண்டுமென்கின்றது. இருவர் கடவுளும் மதமும் சேர்ந்தாற்போல் வாழவேண்டும் மதிக்கப்படவேண்டும் என்றால், போலீசு, துப்பாக்கி, பட்டாளம், ஜெயில், அடி, உதை தயாராய் இருக்கவேண்டியதிருக்கிறது. இங்கு அன்புக் கடவுளுக்கும் சத்தியக் கடவுளுக்கும் "எம் மதமும் சம்மதத்துக்கும்" அறிவு மதத்துக்கும் இடமே இல்லை. ஒருவன் கடவுளுக்கு உருவம் கற்பிக்கப்படுகிறது. மற்றவன் கடவுளுக்கு உருவம் குணம் செய்கை எதுவும் கற்பிக்கப் படுவதில்லை. ஒருவன் கடவுளுக்கு பெயரும் பெண்டுபிள்ளை குடும்பமும் ஆபாச ஒழுக்கங்கெட்ட வாழ்க்கையும் கற்பிக்கப்படுகிறது. மற்றவன் கடவுள்களுக்கு அவை கண்டிப்பாக இல்லை. இந்த இரண்டில் ஒன்றைத் தவிர வேறு கடவுளும் மதமும் இன்று "காண"ப்படுவதில்லை. கேட்கப்படுவதில்லை. இம்மாதிரி வழக்கங்கள் உள்ள கடவுள்
சேற்றில் விழுந்தவன் எப்ப
கரை யேறுவான்.

எப்படி இருந்த போதிலும் நா
கருதுவது என்னவென்றால்
வொருவரும் மற்றவர்களுக்
தன்னால் கெடுதி இல்லாத வா
நடத்தவேண்டும். மனிதனிடத்தி
பொறாமை, வஞ்சகம், துவே
கவலை, துக்கம் ஏற்படுவதற்கு
மில்லாத சாந்தி வாழ்வுக்கு வ
தேடவேண்டும். இதுதான் எ
ஆசை. இதை மதம் என்று
கடவுள் என்றாலும் நான் கோ
துக் கொளவதில்லை.

கோவையில்

போர்வாள்

விற்பனையாள

S. மீனாட்சிசுந்தரம்,

சுப்பிரமணியம் ரோ

கோயம்புத்தூ

(7-ம் பக்கம் தொடர்ச்சி

கருத்து வேற்றுமையின்
அதில் நமக்குச் சிறி
ஐயமில்லை. காணாத க
களையும் காணவைப்பர்
ழர். கேளாத செவிகளை
கேட்க வைக்கும் தமிழ
அதிலும் நமக்கு ஐயமில்
அரசனின் முரசு கட்டி
அறியாது படுத்துறங்
தமிழ்ப் புலவனை வெ
வீழ்த்திடாது, அருகிருந்
களைப்புத் தீரக் கவரி வீ
தமிழ் மன்னன் பிறந்
நாடு இது. அத்தகை
தமிழ்ப் பண்பாட்டை அ
விக்கும் புறநானூறு பிற
நாடும் இது. எனவேதா
நமக்கு ஐயமில்லை தமி
தம் நோக்கும் போக்
குறித்து!

தலை குனியத்தான் வேண்டும்!

“சாக்ரடீஸ்”

ா பாவி!
அடிமுட்டாள்!
ர்வம் பிடித்தவன்!
நெஞ்சழுத்தம் வாய்ந்தவன்!
திமிர் அதிகம் இவனுக்கு!
இவனை லேசில் விடக்கூடாது!
டி! உதை! அடி! குத்து!
வ்வளவு தைரியமய்யா இவ
க்கு!
ன்ன திமிர் இருந்தால் அந்
குழந்தையை இவன், தன்
பால் தொட்டு எடுத்திருப்
!
டாதே இவனை!
காண்டா சவுக்கை.
ளிய மரத்தில் கட்டிவிட்டு
கு சவுக்கால்!
த்தி கெட்ட கழுதை!
கம்பாவி!
வ்வளவு அர்ச்சனைகளுக்
அடிக்கும் உதைக்கும்
டையே நடுநடுங்கிக்கொண்டு
கிறான் ஒரு மனிதன். சுற்
ம் ஒரு பெருங் கூட்டம்
ழ்கொண்டு அவனைத் தாக்கு
, தடி, கட்டை, கத்தி,
மிலார், இன்னோரன்ன
கருவிகள் கொண்டு. வேங்
கூட்டத்திற் கிடையே சிக்
காண்ட ஒரு மான்போல,
நாகங்கள் நடுவில் அகப்
க்கொண்ட ஒரு பச்சிளங்
தைபோல, கொட்டும்
கள் சூழ, அவை நடுவே
யும் மனிதன்போல அவன்
க் கூட்டத்தினிடம் அகப்
க்கொண்டான். தீப்பொறி
தம் கண்கள், தாகக ஓங்கிய
ள், உதைக்க முன் வரும்
ள், ‘நொறுக்கு அவனை’
ம் குரல்கள் இவையே
றும். இத்தனைக்கும்
உள்ளான் அவன்.

“இல்லிங்க சாமி! இல்லிங்க சாமி! தெரியாம செஞ்சிப்புட்டேன்! மன்னிச்சுடுங்கோ சாமி! கெஞ்சுகிறேன்! உங்க காலைக் கும்பிடறேன்; நீங்க காலால் இடுகிற வேலையைத் தலையால் செய்யுறேன்! கொஞ்சம் பொறுத்துக்குங்க!”

கதறிக் கதறிக் கூவுகிறான் அவன். ஆனால் ஆத்திரமடைந்து தாக்கும் கூட்டம் அவனை விட்டபாடில்லை. அவன் அலற அலற தாக்குதலின் வேகம் அதிகரித்ததே தவிர குறையவில்லை. மன்னியுங்கள் மன்னியுங்கள் என்று அவன் கெஞ்சக் கெஞ்ச சூழ உள்ளார் உறுமல் மேலும் மேலும் உரம் பெற்றது; ஒடுங்கவில்லை. “மன்னிப்பதா! உன்னையா? இந்த மாபாதகம் செய்த உன்னையா” என்று கூவிக்கொண்டே, கூட்டம், மறுபடியும் மறுபடியும் அவனைத் தாக்குகிறது.

என்ன குற்றம் செய்தான் அவன் இத்தகு தண்டனை பெற? கொலை செய்தானா? திருடினானா? நம்பிக்கை மோசடி நடத்தினானா? நாட்டு மக்களைக் காட்டிக் கொடுத்தானா? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தானா? கற்பழித்தல் கத்திக்குத்து ஏதேனும் செய்துவிட்டானா? இல்லை **ஒரு குழந்தையைக் காப்பாற்றினான் அவ்வளவுதான்.** சாக இருந்த குழந்தையை அவன் மரண தேவதையிடமிருந்து தட்டிப் பறித்து மீட்டுக் கொண்டுவந்தான். அவன் மட்டும் இன்னும் ஒரு கண நேரம் அந்த இடத்திற்கு வராமல் இருந்திருந்தால், வந்தும், “நமக்கென்ன குழந்தை பற்றி? நம் வழியே நாம் செல்வோம் நம் வேலையைப் பார்த்துக் கொண்டு” என்ற மனப்போக்குகொண்டிருந்தால், கொஞ்சம் பராமுகமாய் இருந்திருந்தால், ஒரு குழந்தை மாண்டுபோய் இருக்கும். அவனுடைய இரக்க உணர்ச்சி குழந்தையைக் காப்பாற்றும்படி அவனைத் தூண்டிற்று— அவன் காப்பாற்றினான். அதற்குத்தான் அவனுக்கு அடியும் உதையும் குத்தும் வசையும் கிடைக்கிறது.

அவன் வந்து கொண்டே இருந்தான். இளமங்கை ஒருத்தி கோவென்று கதறிக் கொண்டிருந்தாள். குழந்தை கிணற்றில் விழுந்துவிட்டது— காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று கூவினாள். பக்கத்தில் பலர் இருந்தனர். பலர் ஓடோடியும் வந்தனர் கூக்குரல் கேட்டதும். ஆனால் யாரும் குழந்தையைக் காப்பாற்ற முன்வரவில்லை. குழந்தையை மீட்பதற்காகக் கிணற்றில் குதித்து மீண்டுவரத் தெரியாது அவர்களுக்கு. தெரிந்த இரண்டொருவர்க்கும் மனித உணர்ச்சி இல்லை. அவர்கள்தம் இருதயத்தில் ஈரம் இல்லை. எனவே குழந்தையைக் காத்திட முனையவில்லை. ஆனால் அவன் கண்டான். என்ன சேதி என்று கேட்டான். சேதி தெரிந்ததுதான் தாமதம், எல்லோரையும் விலக்கிக் கொண்டு, குதித்தான் கிணற்றில், குழந்தையை வாரி எடுத்துக்கொண்டு அடுத்த கணம் கரைமேல் நின்றான்.

குழந்தையின் உயிரை மீட்ட உத்தமனுக்கு நன்றி செலுத்த வேண்டிய கூட்டம்— தாங்கள் செய்ய அஞ்சிய அருஞ்செயலைச்

செய்தவனைப் போற்றிப் புகழ வேண்டிய கூட்டம் அவனை நையப் புடைத்தது. ஏன் இந்த அடாத செயல் புரிந்தாய் என்று கேட்டது. அவனோ, மன்னிக்கவேண்டும் என் செயல் தவறுதான் என்று கெஞ்சினான். அந்தக் கூட்டத்தில் ஒரு குரல் கூட ஐயோ பாவம் அவனைத் தாக்காதீர்கள் என்று கூறவில்லை. குழந்தையைக் காப்பாற்றினவனைக் கொடுமைப் படுத்துவது முறையா என்று கேட்கவில்லை. இந்தச் செயல் அடுக்குமா என்று பேசவில்லை. மற்றவர்கள் பேசவில்லை என்பது மட்டுமல்ல; அவனேகூட நன்மை செய்த என்னைத் தாக்குவது நீதியா என்று கேட்கவில்லை. "என்னை மன்னித்து விடுங்க சாமி" என்றுதான் மன்றாடினான்; அம் மக்களிடம்-இல்லை-அம் மாக்களிடம்.

காப்பாற்றப் பட்டவர்கள் காப்பாற்றியவனுக்கு நன்றி செலுத்துதல் தான் முறை. நன்றி செலுத்தா திருப்பது மனிதத் தன்மைக்கே ஒவ்வாத பண்பு. ஆனால் அந்தக் கூட்டமோ நன்றி செலுத்தாதது மட்டு மல்ல; காப்பாற்றியவனைச் சித்திரவதையும் செய்தது.

கள்ளிக் கோட்டைக்கு அருகே உள்ள குலாதி என்ற சிற்றூரில் நிகழ்ந்தது இச் சம்பவம். **பாம்பே சமாசார்** என்னும் பத்திரிகை இந்தத் தகவலை நமக்குத் தருகிறது.

இந்த விசித்திரமான—மனிதப் பண்புக்கு மாறான—நாகரிகம் தெரியாத காட்டுமிராண்டிகளும் கூட கண்டு நகைக்கக் கூடிய நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன தெரியுமோ? குழந்தை மேல் ஜாதியில் பிறந்தது. காப்பாற்றியவன் சண்டாள குலத்தினன் ஆதித் திராவிடன்! குழந்தைக்கு ஆபத்து என்பது கேட்டும் அதைக் காப்பாற்ற முனையாது,

(4-ம் பக்கம் பார்க்க)

வந்த விடுதலை யாருக்கடா

"தமிழ் ஒளி"

வந்த விடுதலை யாருக்கென்றே—அதை
வாங்கிய வீரரைக் கேட்டிடுவோம்—இங்கு
நொந்து கிடப்பவர் வாழவில்லை—எனில்
நொள்ளை விடுதலை யாருக்கடா? (1

ஏழையின் துன்பங்கள் மாயவில்லை—மத
ஏடுகள் இன்னமும் தீயவில்லை—பணப்
பேழைகள் கையினில் ஆதிக்கமாம்—எனில்
பேசும் விடுதலை யாருக்கடா? (2

பட்டினி என்னும் சொல் ஓடவில்லை—பிச்சைப்
பட்டாளத்தின் துயர் நீங்கவில்லை—இங்கு
வட்டிக் கடைக்காரன் வாழுகிறான்—எனில்
வந்த விடுதலை யாருக்கடா? (3

சாமி, திருவிழா ஓயவில்லை—மடத்
தம்பிரான் செல்வாக்கு மாயவில்லை—கலைப்
பூமியிலே ஒளி பாயவில்லை—வெறும்
பொட்டல் விடுதலை யாருக்கடா? (4

பார்ப்பானின் கொட்டம் அடங்கவில்லை—கவி
பாரதி எண்ணமும் கூடவில்லை—நல்ல
தீர்ப்பினை மக்களை அடையவில்லை—வட
தேச விடுதலை யாருக்கடா? (5

வெள்ளையன் ஓடிடும் நேரத்திலே—அவன்
விட்டுச் செல்லும் ஆட்சி மேடையிலே—பகற்
கொள்ளைக் கடைக்காரர் ஏறுகிறார்—இந்தக்
குருட்டு விடுதலை யாருக்கடா? (6

பஞ்சைத் தொழிலாளர் ஓங்கவில்லை—அவர்
பார்வையில் சோகமும் நீங்கவில்லை—தமிழ்
நெஞ்சந் துடிக்குது நீதியில்லை—எனில்
நேர்ந்த விடுதலை யாருக்கடா? (7

பொதுவில் உடைமைகள் ஆகிடவும்—பணப்
பூதங்கள் ஆட்சியும் ஏகிடவும்—இருள்
மதங்கள் எலும்பொடி பட்டிடவும்—எழில்
வாய்ந்த விடுதலை வேண்டுமடா! (8

எல்லோரும் செந்தமிழ் கற்றிடவும்—இந்தி
இங்கு நுழையாமல் எற்றிடவும்—பொருள்
இல்லாமை இல்லாமற் செய்திடவும்—நமக்
கேற்ற விடுதலை வேண்டுமடா! (9

கோட்டையில் நம்கொடி ஏற்றிடவும்—தொழிற்
கொள்கை சமதர்மம் வாய்ந்திடவும்—வட
நாட்டவர் ஆதிக்கம் சாய்ந்திடவும்—தமிழ்
நாட்டு விடுதலை வேண்டுமடா! (10)

ம்பக்கத் தொடர்ச்சி)
எழுதக்கூடாத சங்கதி
எழுத்தாளர்கள் கூற சங்
ஏற்படுகிறது என்பதை
நாம் மறக்கமுடியாது
ஒரு காரணத்திற்காகவ
புனைபெயர்கள் இருக்க

பெயர் முறையே கூடாது
வாதாடும் அன்பர்களு
ஒரு கேள்வி. "பாரதி
" என்ற பெயர் புனை
இயற்பெயரா? அவரது
பெயரைப் பல்லாயிரக்
ான தமிழர்கள் அறி
ரா?

ஞர் அண்ணுதுரையை
க்கொள்வோம். தாம்
சொல்லக்கூடிய கட்டுரை
"சி. என். ஏ." என்றும்
உரையாடல் போன்ற
ளை எழுதும்போது "ஒற்
ன்றும், கதைகள் எழு
ாது "சௌமியன்" என்
திறந்த மடல்களை வரை
ாது, "நீலன்" "வீரன்"
ம் புனை பெயர்களிட்டு
வருகிறார். அவ்வாறு
ணுதுரை எழுதுவதால்
ஒருவரே ஒரே பெயரில்
றை எழுதினுல் சலிப்பு
ம் என்பதை உணர்ந்து
எழுதி வருகிறார். அவர்
திரி செய்து வருவது
விதத்தில் கோழைத்தன
?

ந்த எழுத்தாளரும் பேச்
மான திரு. வி. க. கூட
போலி" என்னும் புனை
ல் கட்டுரைகள் தீட்டி
கிறார் நவசக்தியில்.

கிலாந்தில் ஜான்சன்
கிலிருந்த கவிஞனும்
தாளனுமான கோல்டு
என்பவனும் சீனத்துத்
ஞானி (Chinese
sopher) என்ற புனை
ட்டு பல கடிதங்கள்

வரைந்து தன்னுட்டு மக்க ளை
இடித்துரைத்துள்ளான்.

இவர்கள் எல்லாம் புனை
ட்டு எழுதியிருப்பது பெய
லோ பித்தலாட்ட அச்சத்
லோ அ எண்ணத்
ல்ல என்பதை நாம்
உணரவேண்டும். வேறு பெய
ரில் எழுதினுல் கவர்ச்சி ஏற்
பட்டு முன்னிலும் பன்மடங்கு
பயன் விளையும் என்ற உயர்ந்த
நோக்கத்தினுல்தான் எழுதியுள்
ளார்கள்.

ஒரு சில எழுத்தாளர்கள்
'புனை பெயர்' வைத்துக்கொண்டு
பித்தலாட்டம் செய்வதென்
னவோ உண்மைதான். ஆனுல்,
அவர்கள் கூட, தம்மை உயர்த்தி
விடும் "பெரிய கைகள்" கிடைக்
காததால் "தன் கையே தனக்
குதவி" என்ற மொழியின்படித்
தம்மைத் தாமே உயர்த்திக்
கொள்கின்றனரே தவிர
வேறில்லை. பாவம்! வேறு எப்
படிதான் அவர்கள் புகழ் பெறு
வது.

எது எப்படி இருந்தாலும்
ஒருவர் சூட்டிக்கொள்ளும் புனை
பெயர்களின் மூலமாக நாம் ஒரு
எழுத்தாளர் முற்போக்குடை
யவரா அல்லவா என்பதைத்
தெரிந்துகொள்ள முடிகிறது என்
பதை யாரும் மறுக்க முடியாது.
கௌடில்யன், பாணினி, சாணக்
கியன், அகஸ்தியன், அனுவுதன்
என்று பெயரிட்டு எழுதும் ஒரு
வகை எழுத்தாளர்களின் வட
மொழிப் பற்றையும், இன
உணர்ச்சியையும்; சேரன், செழி
யன், இளங்கோவன், நெடுமா
றன் என்று தம்மை இவ்வண்
ணம் அழைத்துக்கொள்ளும்
வேறு வகை எழுத்தாளரின்
தமிழுணர்ச்சியையும் இன
உணர்ச்சியையும் இந்தப் புனை
பெயர்களே திட்டமாகத் தெரி
வித்துவிடுகின்றன அல்லவா?

சிலர் நினைப்பதுபோல் புனை
பெயர் இன்றிருந்து நாளை
அழிவதன்று. உயர்ந்த நோக்க
மும், தெளிந்த சிந்தனையும்,
பண்பட்ட உள்ளத்தோடு
அமைந்த நடையும் உடைய
சிறந்த எழுத்தாளர்களின் புனை
பெயர்கள் என்றும் நிலைத்து நிற்
கும்.

கடைசியாக நான் ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன்.
பொது மக்களும் அறிவாளிக
ளும் விரும்பவேண்டியதும் கவ
லைப்பட வேண்டியதும் புதிய
புதிய கருத்துக்களும், புத்துல
கத்தை உருவாக்கும் எழுத்
தோவியங்களும் நாளுக்கு
நாள் பெருக வேண்டுமென்று
இருக்கவேண்டுமே தவிர புனை
பெயர்களைக் குறித்து அவ்வள
வாகச் சிந்தித்து முடிவு கட்ட
வேண்டிய அவசியம் இல்லை.

—

ஒருநாள் ஒரு பெ ழுதாகிலும்......

உண்மை உரைக்க வேண்டும்!

அறிஞர் அண்ணாத்துரை அவர்களால் எழுதப்பட்டு, திரு. K.R. ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையாரால் திருச்சியில் நடத்தப்பட்டு வரும், "ஓர் இரவு" நாடகத்திற்கு 15-11-1947ல் "கல்கி" ஆசிரியர் ஸ்ரீமான் ரா. கிருஷ்ணமூர்த்தி (ஸ்ரீமான் தான்; திருவாளர் அல்ல) தலைமை வகித்து ஆற்றியசொற்பொழிவின் ஒரு பகுதி:—

சபையோர்களே! நமஸ்காரம். நான் பல நாடக கம்பெனிகளில் நாடகம பார்த்திருக்கிறேன். கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களிலும் நாடகங்கள் பார்த்திருக்கிறேன். இந்தக் கம்பெனியில் இன்றுதான் நாடகம் பார்க்க நேர்ந்தது. நாடகம் ரொம்ப பிரமாதமாக இருந்தது. நான் பார்த்த நாடகங்களையெல்லாம்விட இந்த நாடகத்தில் 'ஸ்டேஜ் டெகனிக' மிகவும பிரமாதமாய் இருந்தது. இங்கு நான் பார்த்த "ஸ்டேஜ் டெகனிக்"குகளை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் பார்த்த நாடகங்களில கூட பார்ககவில்லை.

"ஸ்ரீ அண்ணாத்துரை அவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். அவருடைய பேச்சு வன்மையைப் பற்றியும் நன்கு அறிவேன். ஆனால், "ஸ்ரீ அண்ணாத்துரை அவர்கள் ஒரு சிறந்த நாடகாசிரியர், கலைஞர்' என்பதை இன்றுதான் உணர்ந்தேன். எதிர்பாராத சம்பவங்களைப் புகுத்தி, ஆச்சரியப்படும் வகையில் கதை அமைத்து எழுதியுள்ளதுடன்; சமூகத்திலுள்ள ஊழல்களை நன்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். இம்மாதிரி நாடகங்கள்தான் இனிமேல் நடைபெற வேண்டும்.

நாம் சுதந்திரம் இப்பொழுதுதான் அடைந்துள்ளோம். நம் சமூகம் பல வழிகளில் முன்னேறவேண்டியிருக்கிறது. அதற்கு இம்மாதிரி நாடகங்கள் மிகவும் அவசியம். நம்மைவிடக் கீழ் நிலையில் இருந்த ரஷ்யா, இன்று உலக வல்லரசுகள் கண்டு அஞ்சும்படியான நிலையை அடைந்துள்ளதற்கு ஒரு முக்கியமான காரணம் அந்த நாட்டில் நாடகம் அரசாங்கத்தாரால் போற்றி வளர்க்கப்பட்டதாகும். நமது நாட்டிலும் அரசாங்கத்தார் இம்மாதிரியான நாடகங்கட்குப் பொருள் உதவி செய்து ஆதரிக்க வேண்டும். ஆனால் இப்பொழுது 12½ சத விகிதம் உள்ள தமாஷா வரியை 33 சத விகி உயர்த்தப்போகிறார்கள். உதவியாவ சமீபகாலமாக நாட்டில் வளர்ந்து வரும் நா கலை அழிந்து போகுமேயல் முன்னேற முடியாது. மக்கள் தான் இந்த வரி உ ஏற்படாமல் இருக்க மு செய்யவேண்டும். சிறந் கரும்; கலா ரசிகருமான K. ராமசாமி அவர்கள் கலை வ யில் ஊக்கங் காட்டுவது அவரை நான் பாராட்டு இந்த நாடகத்தில், நடித்த கள் அனைவரும் பிரமா நடித்தார்கள். இச் ச ருக்கும், ஸ்ரீ அண்ணாத் அவர்கட்கும், எனது பா தலைத் தெரிவித்துக் கிறேன்."

போர்வாள்

திராவிடர் வார வெளி

உள் நாடு வெ

தனி இதழ் ரூ.	0	1	6 0
ஆண்டு 1-க்கு	5	0	0 6
6 மாதங்கட்கு	2	8	0 3

போர் வாள்,

பவழக்காரத் தெரு, சென்

உத்தம மித்திரன்

ஆசிரியர்: மாயவரம் K. B. M. I. சுர்மா

(மாஜி முஸ்லீம் ஜெர்னல் ஆசிரியர்)

கட்சி வேற்றுமை பாராட்டாது திராவிடஸ்தான் கோரிக்கை மூலம் இமாமணத்தின் விலங்கைத் தறிப்ப இதன் முக்கிய நோக்கம். 27-11-47 முதல் வெளிவரும்

கட்டண விவரம்:

	உள்நாடு		வெளிநாடு
ஒன்றின் விலை	0—4—0	...	0—5—0
ஆண்டுக்கு	12—0—0	...	15—0—0
6 மாதத்திற்கு	6—8—0	...	8—0—0

எல்லா ஊர்கட்கும் டடி 1க்கு ரூ. 1-0-0 வீதம் முன் பண கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

நிர்வாக ஆசிரியர்

246, பந்த மன்ஜில்,

அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை 1.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli